**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution Witness | : | PW-14 | Taluk | : | |
| Name | : | தேவி | Age | : | 37 |
| Husband Name | : | பழனிச்சாமி | Occupation | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியகிரகாரம் காளியம்மன்கோவில் பெரியதெருவில் வசித்து வருகிறேன். நான் முன்பு வேலைக்கு போய்க்கொண்டிருந்தேன். தற்போது வேலைக்கு போகவில்லை. வழக்கில் இறந்துபோன குணா (எ) குணசீலன் எனது நாத்தனார் மகன் என்ற வகையில் எனக்கு தெரியும். குணா பள்ளியகிரகாரம் கோவில் அருகே உள்ள ஒர்ஷாப்பில் வேலை செய்தார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் 3.15மணிக்கு குணாவை கொன்றுவிட்டதாக எனது கணவருக்கு போன் வந்தது. காந்திநகரில் இறந்தவரின் வீட்டிற்கு பக்கத்து வீட்டு சந்தில் உள்ள பாத்ரூம் அருகில் இறந்துகிடந்தார். நாங்கள் சென்று பார்ப்பதற்குள் அவரை திருவையாறு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றுவிட்டார்கள். நாங்கள் போய் பார்த்தபோது சம்பவ இடத்தில் இறந்தவரின் மூளை சிதறிகிடந்தது. நாங்கள் ஊர்ஜனங்களுடன் காவல்நிலையத்திற்கு சென்று கேட்டபோது போலிசார் குணாவை கொலை செய்வதற்கு பயன்படுத்திய ஆயுதங்களை எங்களிடம் காட்டினார்கள். சம்பவ இடத்தில் மணி மற்றும் இரண்டு நபர்கள் சேர்ந்து கொன்றதாக ஊர்மக்கள் அழுதார்கள். ஆனால் நான் கண்ணால் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution Witness | : | PW-15 | Taluk | : | |
| Name | : | பழனிச்சாமி | Age | : | 43 |
| Father Name | : | ராஜாங்கம் | Occupation | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியக்கிரகாரம் பெரியதெருவில் வசித்து வருகிறேன். நான் தஞ்சாவூர் மேலவீதியில் உள்ள இலைக்கடையில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன குணா (எ) குணசீலனை தெரியும். குணாவுக்கும் மணிக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்தது. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நான் வேலை முடித்து 4 வருடத்திற்கு முன்பு 2021ம் ஆண்டு மே மாதம் வெள்ளிக்கிழமை மதியம் 2.30மணியளவில் வந்தபோது 3.00மணிக்கு இறந்துபோன குணசீலனின் தம்பி ஜெயசீலன் எனக்கு போன் செய்தார். மணி மற்றும் இருவர் சேர்ந்து குணாவை அடித்து கொன்றதாக தகவல் சொன்னார். எனக்கு ஆஜர் எதிரி மணியை தெரியும். மற்ற இருவரையும் தெரியாது. நானும் என் மனைவியும் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தோம். இரத்தமாக இருந்தது. பிறகு பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை திருவையாறு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றுவிட்டார்கள். பிறகு காவல்நிலையம் போய்விட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution Witness | : | PW-16 | Taluk | : | |
| Name | : | சுகந்தன் | Age | : | |
| Father Name | : | பாஸ்கரன் | Occupation | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் பள்ளியகிரகாரம் காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் தற்போது வளநாடு சில்க்சில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன குணசீலனை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் EEE படித்துள்ளேன். காந்தி நகரில் சமீபத்தில் 2 வருடம் தான் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு மாயாவரத்தில் குடியிருந்தேன். என் அப்பா, அம்மா பரம்பரையாக காந்தி நகரில் குடியிருக்கிறார்கள். நான் மாயாவரம் அரசுபள்ளியில் படித்தேன். நான் EEE மாயவரத்தில் படித்தேன். கொரோனா காலத்தில் எனக்கு விடுமுறை என்றால் சரிதான். ரவிச்சந்திரன் மகன் பிரகாஷ் ராஜ் என்பவரை தெரியும். மணக்கரம்பையில் இந்தியன் வங்கி உள்ளது என்றால் சரிதான். 29.5.2020 அன்று பகல் 12.30மணிக்கு நானும் பிரகாஷ்ராஜ் என்பவரும் மணக்கரம்பை இந்தியன் வங்கி அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது நடுக்காவேரி போலிசார் அசோக்குமார் (எ) அரச குமாரை கைது செய்தார்கள் என்றும் அப்போது அரசகுமார் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றாலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடமும் பிரகாஷ்ராஜ் என்பவரிடமும் போலிசார் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் அரச குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அரசூர் புதுத்தெருவில் அவரது வீட்டின் பின்புறம் பரணியில் மறைத்து வைத்திருந்த இரும்பு பைப்பை எடுத்து ஆஜர் செய்தார் என்றாலும் அதனை போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி மகசரில் என்னிடமும் பிரகாஷ் ராஜ் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றாலும் தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு அவர்கள் சொற்படி போலிசாரிடம் நான் சொல்லிய வாக்குமூலத்திற்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**இல்லை.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.